# பாதுகாவலன்

PATHUKAVALAN


இவ்வாரவிநியோகம் 3

| | |
|---|---|
| பாஷையூர் | 550 |
| பண்டிவிரிச்சான் | 100 |
| அடம்பன் பங்கு | 70 |
| நானாட்டான் | 65 |
| மாம்புரி (புத்தளம்) | 62 |
| உயிலங்குளம் பங்கு | 60 |
| தலைமன்னார் பங்கு | 60 |
| மாத்தளைப் பங்கு | 60 |
| புங்குடுதீவு (மேற்கு) | 60 |
| முருங்கன் பங்கு | 60 |
| பதுளைப் பங்கு | 50 |
| தாளையடிப் பங்கு | 47 |
| வவுனியாப் பங்கு | 44 |
| செட்டிகுளம் | 35 |
| விடத்தல் தீவு | 35 |


University of Jaffna Sri Lanka
RECEIVED
1989 -11-1 0
Periodicals
Library



மலர்: 115 இதழ் : 41 3-11-1989 (நவம்பர். 3 — நவம்பர்.10) ரூபா 1-50 — இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


- எமது பாவம்தான் நாட்டின் தோல்வியின் அடிப்படைக் காரணம்
- இலங்கை மக்கள் சமமாக மதிக்கப்பட்டால் ஒற்றுமையாக வாழலாம்

# உண்மையான ஜனநாயகத்திற்கு நாம் அர்ப்பணிக்கப்பட்டால்தான் நாட்டில் சமாதானமும் சகஜநிலையும் ஏற்படும்

**கைதுசெய்யப்பட்ட அல்லது காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து உதவ காரியாலயம் அமைத்தல், கைவிடப்பட்ட உடல்களை எடுத்து தேவையான அடக்கத்திற்கு ஒழுங்கு செய்தல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையில் செய்யும் இரக்கப் பணிகளுக்கு உதவல்.**

**நாட்டின் சமாதானத்திற்கு திருச்சபையின் பணி என்ன? என்ற தலைப்பில் கொழும்பு மறைமாவட்ட பங்குக் கூட்டம் மகாவந்தனைக்குரிய நீக்கிலஸ் மாக்கஸ் பர்ணாண்டோ, மகாவந்தனைக்குரிய ஒஸ்வல் கோமஸ் ஆகியோர் தலைமையில் கூடிய போது கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்தது.**

சமயகல்வியும் தொழில் வாய்ப்பும், அமைதியற்ற இளைஞர்களின் பிரச்சனைக்குத் தீர்வு.

அடிப்படை மனித உரிமைகளும், மதிப்பீடுகளும் மீள உறுதிப்படுத்தப்படல்.

இலவசக்கல்வியும், இலவச மருத்துவ உதவியும் பாதுகாக்கப்படல் வேண்டும்.

வன்செயல் எங்கிருந்து எப்படி வந்தாலும் கவனிக்காமல் இருக்க முடியாது.

கிறிஸ்தவர்கள் நாட்டின் ஜனநாயகத்திற்கும், இறைமைக்கும் வழிவகுத்தல்.

பாவம் நாட்டின் தோல்வியின் அடிப்படைக் காரணம்.

மனவருத்தமும் மனமாற்றமும், செபமும் தபமுமாக மாறவேண்டும்.

## மன்னார் மறைவட்ட புதிய நியமனங்கள்— 1989

1. அருட்திரு. பி. பிரான்சிஸ்—பங்குத்தந்தை, தலைமன்னார்.
2. அருட்திரு. பி. அருள்நாதன், (ஒ. எம். ஐ) பங்குத்தந்தை, தாழ்வுபாடு.
3. அருட்திரு. பீற்றர் மனோகர்—உதவி பங்குத்தந்தை, மன்னார்.
4. அருட்திரு. T. நவரெட்ணம்—மறைக்கல்வி இயக்குநர், மன்னார்.
5. அருட்திரு. A. செபமாலை—பங்குத்தந்தை, விடத்தல்தீவு.
6. அருட்திரு. N, கெனடி—பங்குத்தந்தை, ஆள்காட்டிவெளி.
7. அருட்திரு. N. பீற்றர்—(ஒ. எஸ். எம்) பங்குத்தந்தை, உயிலங்குளம்.
8. அருட்திரு. போல்நட்சத்திரம் (ஒ. எம். ஐ.) பங்குத்தந்தை, வங்காலை.
9. அருட்திரு. ஸ்ரனி அன்ரனி (ஒ. எம். ஐ.) பங்குத்தந்தை, நானாட்டான்.
10. அருட்திரு. S. எமிலியானுஸ்பிள்ளை—பங்குத்தந்தை, முருங்கன்.
11. அருட்திரு. டெஸ்மன் குலாஸ்—உதவிப் பங்குத்தந்தை, முருங்கன்.
12. அருட்திரு. A. இராயப்பு—பங்குத்தந்தை, சிலாவத்துறை.
13. அருட்திரு. Y. தேவசகாயம்பிள்ளை—பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான்.
14. அருட்திரு. S. K. தேவராஜா—உதவிப் பங்குத்தந்தை, வவுனியா.
15. அருட்திரு. S. அவிதப்பர்—பங்குத்தந்தை, ஓமந்தை.

## நோபல் சமாதானப்பரிசு

திபேத்நாட்டின் ஆன்மீகத் தலைவரும் புத்தகுருவுமான தலாய் லாமாவுக்கு இவ்வாண்டு நோபல் சமாதானப் பரிசு அளிக்கப்படவிருக்கிறது.

தலாய்லாமா சகல மக்களுக்கும் இயற்கைப் பொருள்களுக்கும் வணக்கமும், மதிப்பும் அளிக்கும்படி போதித்ததை நோபல் குழு பாராட்டியுள்ளது.

''சர்வதேச பிரச்சினைகள், மனித உரிமை பிரச்சினைகள், சூழற் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தீர்த்துவைப்பதற்கு தலாய் லாமா ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக நோபல் பரிசுக் குழுவின் தலைவர் திரு ஏகில் ஆர்விக் கூறியுள்ளார்

1935 ல் பிறந்த தலாய் லாமா 1959 ல் 100000 ஆதரவாளர்களுடன் திபெத்திலிருந்து வெளியேறி, இந்தியாவில் இமயமலையின் அடிவாரத்தில் தமது தேசாந்தர அரசாங்கத்தை நிறுவினார், வன்முறைகளை நாடாது அமைதியான முறையில் திபேத்தை சீன ஆட்சியிலிருந்து விடுவிக்க உழைத்து வந்தார்.

தலாய் லாமாவுக்கு இப்பரிசு அளிக்கப்பட்டது, சீனாவின் முகத்தில் அடித்தது போல என்று நோர்வே தொலைக்காட்சி கூறியுள்ளது. சீன ஆட்சியை எதிர்த்து 1987 ல் திபேத்திய தலைநகரான லாசாவில் நடந்த கலவரங்களில் 38 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிறீஸ்தவர்களே வகுப்பு பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்

''கிறிஸ்தவர்கள் மட்டுமே இந்தியாவை ஒரு வகுப்பு பேதம், சாதி பேதமற்ற சமுதாயமாக உருவாக்க முடியு'' மென மனிதவியல் பேராசிரியர் டாக்டர் ஓம்பிரகாஷ் கான்பூரில் நடைபெற்ற ஓர் கருத்தரங்கில் கூறியுள்ளார். ''பொது வாழ்வில் கிறிஸ்தவர்'' என்ற இந்தக் கருத்தரங்கு கான்பூர் கத்தோலிக்க சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

''கர்மம்'' என்னும் இந்து மதக் கோட்பாடு முயற்சியும் சுயமதிப்புமின்மை, சாதி முறை, பெண்களை இழிவுபடுத்தல் போன்ற பல சமுதாயத் தீங்குகளை வளர்த்துள்ளதென்றும், யேசுவின் செய்தியை அது தேவைப்படுவோருக்குக் கிடைக்காமல் செய்வது ஒரு குற்றமாகும் என்றும் டாக்டர் ஓம்பிரகாஷ் மேலும் கூறினார்.

சமூகச் சீர்திருத்தத்துக்கான மிக சக்திவாய்ந்த கருவியான கல்வி என்னும் ஆயுதம் கிறிஸ்தவர்களிடம் உண்டு. ஆனால் நாம் ஒதுங்கி வாழாமல் சமானிய பொது மக்களுக்காக உழைக்க முன் வராவிட்டால் எமது கிறிஸ்தவ கடமையை நாம் நிறைவேற்றத் தவறுகிறோம் என்றும் அவர் கூறினார்.

ஹரிஜனத் தலைவரும் பல்கலைக் கழகப் பேராசிரியருமான டாக்டர் ராம்நாத் இன்றைய சமுதாய கேடுகளில் பல கடந்த காலத்தில் வேரூன்றியுள்ளன என்றும் சிறுபான்மை மக்கள் ஒன்றுகூடி உழைக்க வேண்டுமென்றும் கூறினார்.

குழு உரையாடலின்போது கிறிஸ்தவர் மிகச் சிறுபான்மையோராதலால் அவர்களிடம் போதிய ஆட்களோ மூலபலமோ கிடையாது. அரசியல் கட்சிகளிலும், தொழிற் சங்கங்கள் மாணவர் சங்கங்களிலும் பொதுநல சேவைகளிலும் அவர்கள் இன்னும் கூடிய அளவில் பங்கு கொள்ளவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. முக்கியமாக இளைஞர் பத்திரிகை எழுத்தாளராகி வெகுசனத் தொடர்பு சாதனங்களில் பணியாற்றவேண்டும் எனவும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### கார்த்திகை மாதம்

கார்த்திகை மாதம் இறந்த ஆன்மாக்களின் மாதம்

இம்மாதம் நமக்கு பல கிறிஸ்தவ சிந்தனைகளை முன் வைக்கிறது. நமக்கு அப்பால் ஒரு உலகம் உண்டு. அங்கு ஆதாம் முதல் இன்று வரை இறந்த அனைவரும் வாழ்கிறார்கள். இந்த உலகில் இறக்கின்ற நாம் மறுஉலக வாழ்வு ஒன்றிற்காக உயிர்த்தெழுவோம். அந்த வாழ்வில் இறை அனுபவத்தை நாம் பெற்றுக்கொள்வோம்.

இதையே எமது விசுவாசப்பிரமாணத்தில் புனிதர்களின் சமூக உறவையும், மாமிச உத்தானத்தையும், நித்திய சீவியத்தையும் விசுவசிக்கிறோம் என அறிக்கையிடுகின்றோம்.

மனித வாழ்க்கையில் இறப்பு என்பது தவிர்க்கப்படமுடியாதது என்பது நமக்குத்தெரியும். நாமும் ஒரு நாள் இறப்போம் என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

ஆனாலும் எல்லா இழப்புக்களையும் எம்மால் ஈடுசெய்ய முடிவதில்லை. எல்லா இறப்புக்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடிவதில்லை. எல்லா இறப்புக்களையும், எம்மால் ஏற்றுக்கொள்ளவும் முடிவதில்லை.

இறப்புக்கள் தவிர்க்கப்படமுடியாதவை என்று தெரிந்தும், சில இறப்புக்களை ஈடுசெய்ய முடியாத போது இறைவனிடமே நாம் நீதி கேட்டுத் தோற்று விடுகிறோம்.

இம்மாதமானது இரண்டு முக்கிய கருத்துக்களை நமக்கு எப்போதும் தருகிறது. ஒன்று நமது அன்பிற்குப் பிரியமானவர்களை கல்லறைகளில் வைப்பதோடு நமது அன்பும், கடமையும் முடிந்துவிடாது. மற்றது நாமும் ஒரு நாள் மறு உலக வாழ்விற்காக இறந்து உயிர்ப்போம். அதற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும். நாம் வாழும் நாட்களைப் பொறுத்தல்ல வாழும் வாழ்க்கையைப் பொறுத்தே இந்நிலை நிர்ணயிக்கப்படும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே மறு உலக வாழ்வுபற்றிய சிந்தனை அதிகம் தெளிவாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் வருகை, வாழ்க்கை, போதனை இவற்றுடன் தான் மறுஉலக வாழ்வு என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்'' (அரு 11:25) ''மனிதவாழ்வு மறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை''. இந்த மண்ணக வாழ்வு அழிந்ததும் விண்ணகத்தில நித்தியவீடு ஆயத்தமாய் உள்ளது.

இம்மாதத்தில் நமது கடமை என்ன? சேமக்காலையைத் துப்பரவு செய்தல், மலர் வளையம் இறந்தவர்க்கு சாத்துதல், விளக்கேற்றுதல், ஆன்மசாந்திக்காக அன்னதானம் செய்தல், திருப்பலி ஒப்புக்கொடுத்தல், அவர்கள் மன விருப்பங்களை நிறைவேற்றுதல், அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்தல், அவரின் பிரிவால் துயருறுவோர்க்கு ஆறுதல் சொல்லல், அவரின் இழப்பால் வாழமுடியாமல் இருப்போர்க்கு வாழ்வில் உதவி செய்தல் என்பன அவற்றுள் சிலவாம்.

இவற்றுல் மிக முக்கியமானது செபமாகும். எமது இவ்வுலக அன்பும் நேசமும், அவர்களின் ஞாபகச்சின்னங்களும், கடமைகளும் கல்லறையில் வைப்பதோடு முடியாமல் அதன்பின் தான் ஆரம்பமாக வேண்டும். காலம் செல்லச் செல்ல சிந்தனைகள் அற்று குறைந்து போவது மனித இயல்பு தான். ஆனால் செபம ஒரு போதுமே குறையக் கூடாது அவர்கள் நமக்கு செய்த அனைத்திற்கும் நாம் கைமாறாக எப்போதும் திருப்பலி வேளையில் ''உயிர்த்தெழும் நம்பிக்கையுடன் இறந்து போன சகோதரர் அனைவரையும் நினைவு கூர்ந்தருளும்'' என்னும் செபத்தின் போது செபிக்க வேண்டும்.

எமது மண்ணின் கடந்தகால வன் செயல்களால் இன்றுவரை காணாமல் போய் இறந்தோர், முகம் தெரியாமல் அழிக்கப்பட்டோர், சுடப்பட்டோர், எரிக்கப்பட்டோர் ஆகிய அனைவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, செபிப்பது இம்மாதத்தின் கட்டாய கடமையாகும்.

## இளைஞர் உருவாக்கல் இயக்கமும் பெற்றோர்தின விழாவும்

பல இக்கட்டான சூழ்நிலைகள் மத்தியிலும் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் பெற்றோர் தின விழா மிகச் சிறப்பான முறையில் (11-10-1989) அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடந்தேறியது. யாழ். மரியன்னை பேராலயத்தில் இயங்கிவரும் இவ்வியக்கமானது 1980ம் ஆண்டு திருமலை மட்டுநகர் இளைஞர் ஆணைக்குழுவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட புனிதபத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. G. A. பிரான்சிஸ் யோசப் அடிகளார் முதல் முதல் இயக்கத்தின் கொடியினை ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

இவ்வியக்கத்தின் தலைவர் செல்வன் M. சரத்ஜீவன் தமது வரவேற்புரையில் இவ் இக்கட்டான சூழ்நிலையிலும் பெற்றோருக்கும், இவ்வியக்கத்திற்கும் இடையிலான உறவு வலுப்படவேண்டும் என்பதற்காகவே இவ்விழாவை எடுப்பதாகக் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றிய பேராலயப் பங்குத் தந்தை அருட்திரு. S. H. ஜெபநேசன் அடிகளார் இளமை வேகமும், அதே சமயத்தில் விவேகமும் கொண்டதாக அமையவேண்டும் எனவும், அவனுடைய இளமையானது சீராகப்பயிற்றுவிக்கப்பட்டு, எதிர்காலசந்ததிக்கு உரியதாக மாற்றப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார் பங்குத் தந்தையைத் தொடர்ந்து உரையாற்றிய (இ உ இ) இன் இயக்குனர் அகால மரணத்தால் இறந்த போதும் கூட தளராது இவ்இக்கட்டான காலகட்டங்களிலும் மகத்தான பணிபுரிந்த இளைஞர்களின் தியாக மனப்பான்மையைப் பாராட்டினார். இயக்குனரை அடுத்து சிறப்புரையை நிகழ்த்திய செல்வன் S. டெனிஸ் ஷாந்தன் தனது உரையில் ஆன்மீக, உளவியல் ரீதியில் இளைஞர்களைப் பயிற்றுவித்து அன்புமயமான சமுதாயத்தைக் கட்டிஎழுப்புவதே தமது இயக்கத்தின் நோக்கம் என்றும் கடந்த பத்து ஆண்டுகாலமாக பேராலயத்தில் மாத்திரம் பணிபுரிந்த இவ்வியக்கத்தின் செயற்பாடுகள் ஏனைய பங்குகளுக்கும் விரிவாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டார்.

(இ. உ. இ) இன் ஆண் அங்கத்தவரில் பெரும்பான்மையானோர் பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள். எனவே அன்றைய பிரதம விருந்தினர் உற்சாகமாகத் தனது உரையைத் தொடங்கினார். அவர் தமது உரையில் இன்று இளைஞர்கள் பாரம்பரிய மதிப்பீடுகளில் பெற்றோர் மட்டில தவறிவிடுகின்றனர். ஆனால் இவ்விழாவில் பெற்றோரும், இளைஞர்களும் உற்சாகமாகப் பங்குபற்றுவது இக்கருத்தை முறியடிக்கின்றது என்றும், இளைஞர்கள் தியாகம், அர்ப்பணிப்பு, உற்சாகம் கொண்டவர்களாக பெற்றோராலும், குருக்களாலும் வளர்த்தெடுக்கப்படவேண்டும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்.)

## ஓவியப் போட்டி—11

''தமிழ்த்தாய்க்கு மகனாகக் கிறிஸ்து பிறக்கும் காட்சி''

போட்டி முடிவுத்திகதி, 1-12-89, அடுத்த போட்டி கிறிஸ்மஸ் சிறப்பிதழில் வெளிவரும்.

### ஓவியப் போட்டி 10 இன் முடிவுகள்:
### செபமாலை அன்னையின் உருவம்



1-ம் இடம், செல்வி: B. செபஸ்தியம்மா இல 207, சென் செபஸ்ரியன்வீதி – மன்னார்

2-ம் இடம், செல்வன், ஞானப்பிரகாசம் டொனல்ட் 60, ராஜேந்திராவீதி, யாழ்ப்பாணம்.

3-ம் இடம், செல்வி. றுபேஜினி மரியநாயகம். சென் யோசப் வீதி, சில்லாலை, பண்டத்தரிப்பு.

## மயிர் தேடும் மானிடரே!
### சிந்தியுங்கள் ஒரு நிமிடம்

'' உயிர் நானே -
உணவும் நானே!
உண்மை என்னை நம்புங்கள்
உயிர் வாழ்வில் விசுவசிப்போன்
ஒரு போதும்
சாகான் '' என்றார்.
அயர்வில்லா வார்த்தைகளை
அள்ளித் தந்த இயேசுவிற்கு
''மயிர்'' தேடும் மானிடரே
மன்னிப்புண்டா உங்களுக்கு...?

எங்கோ ஒரு செய்தி கேட்டீர்
எவரோ சொன்ன
வார்த்தை கேட்டீர்!
எங்கெல்லாம் தேடுகின்றீர்...
எங்கே ''மயிர்''
இருக்கு மென்று...?
உங்கள் விசுவாசம் எங்கே...?
உங்கள் ''தேடல்''
இது தானோ?
தங்கமகன் யேசுவினைத் -
தட்டிப் பரி-சோதிக்கின்றீர்...!

எங்களது வாழ்வினுக்கு
ஏதோ ஒரு செய்தி சொல்ல–
தங்கமான விவிலியத்தை–
தான் தேடி அலையாமல்...
பொங்கு ''மயிர்''
உண்டோ என
போலியாய்த் தேடுவோரே–
எங்கள் யேசு
''வார்த்தையினால்''
இட்ட சாபம் உங்களுக்கே...!

''மயிர்'' தேடி அலையாதீர்...!
மானங் கெட்டலையாதீர்...!
உயிர் வாழும்
இறைவன் – உன்னை
உத்தம விவிலியத்தில்
''பெயர் சொல்லி
அழைக்கின்றார்''!
பேதலிக்காது நீவிர்
''மயிர்'' தேடும்
கிறிஸ்தவராய்
வாழாதீர்-வரம் பெறுவீர்!

எஸ். ஏ. நாதர்

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 8. பன்னிரு தூண்கள்:

யெருசலேம் குலத்திலே,
தாவீதின் குடியிலே,
சூசையின் வீட்டிலே
முளைத்த மரம் தான் திருச்சபை.
ஆனால் அது
நான் நானென நெடித்து வளரும் பனையன்று.
அன்றேல்
சொந்தக் காலின்றி
சாய்ந்து சரிந்து
மற்றவனின் தோள் பற்றும் கொடியுமன்று.
மாறாக அது ஆலமரம்.
வேலிகள் கடந்து சுகம் கொடுக்கும்
நிழல் மரம்.
வேர் பட்டபோது விழுதுகள் தாங்கும்
பெரும் மரம்.
அத்தகைய பன்னிரு விழுதுகள் தான்
பன்னிரு அப்போஸ்தலரும்.
அவர்களுள் முதல்வர் இராயப்பர்.
மீனவர்
அதனால்தான் இயேசு அவரை
மனிதனைப் பிடிப்போன் ஆக்கினார்.
முரடர்
ஆனால் முழுமூச்சுடன் இயேசுவை அன்பு செய்தார்.
உறுதியானவர்
அதனால்தான் இயேசு ''உன் பெயர் பாறை'' என்றார்......
அவர் மேலேயே
திருச்சபையையும் கட்டினார்.
இயேசுவையே கண்டித்தார்.
ஆனால்
கட்டளைக்குப் பணிந்தார்.
மறுதலித்தார்.
ஆனால்
மனம் வெதும்பி அழுதார்.
பாமர மனிதனாய் இருந்தார்
அதனால் தான் பரமனின் புனிதரானார்.
ஆண்டவராலேயே
அப்போஸ்தலராக்கப்பட்ட அவர்
ஆதித்திருச்சபையிலே
மத்தியாஸ் தெரிவின்போது
தலைமை தாங்கினார்.
யெருசலேம் திருச்சங்கத்தை
திருச்சபையின் முதற் சங்கத்தை
நடத்தி வைத்தார்.
யெருசலேமில்,
அந்தியோக்கில்,
உரோமையில்,
இவர் தான் திருச்சபையை நிறுவினார்.
சமாரியா, லித்தா, யோப்பா, செசாரியா
இன்னும் பல சபைகளைத்
தரிசித்து, உறுதிப்படுத்தி ஊக்குவித்தார்.
முதல் உரோமையனை
கொர்னேலியுசை மனந்திருப்பியவர் இவரே.
யூத கலாபனைகளில் இருமுறை சிறைப்பட்டார்.
ஆயினும் ஆண்டவர் அருளால் விடுவிக்கப்பட்டு
தொடர்ந்தும் பணி செய்தார்.
கி. பி. 54 இலே,
உரோமையிலே,
நீரோ மன்னனின் வேத கலாபனையிலே
சிலுவையில் அறையுண்டு உயிர்நீத்தார்.
தன் தலைவன் போல் தானும் சாகத் தயங்கி
தலைகீழாய் அறையப் பணித்து
அப்படியே மரணித்ததாகக் கூறுகிறது பாரம்பரியம்.
அன்றைய தினத்திலேயே
வாளால் சிரங் கொய்யப்பட்டு வேதசாட்சியானார்
காலந்தப்பிய அப்போஸ்தலர் சின்னப்பர்
என்றும் வரலாறுண்டு.
கிறிஸ்தவத்தின் எதிரியாயிருந்து
மனம்மாறி
மறைபரப்பிற்கெனத் தன்
ஆவியும், உயிருமீந்த இப்புனிதர்
திருச்சபையின் மிகப் பெரும் கற்றூண்.
இவ்விருவர் நினைவையும்
ஒரே தினத்தில் கொண்டாடுகிறது திருச்சபை.

(தொடரும்)

# புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

அருள்திரு. அதிரியான் யோசப் அ. ம. தி.

II பரிகாரம் தேடல் (இதழ் 39 இன் தொடர்ச்சி)

அகக்கருவிகளாகிய புத்தியும் ஞாபகமும் இரு கரங்களைப் போல் உதவுகின்றன. ஆனால் இன்றையப்போதனை முறையில் ஞாபக சக்தியை அலட்சியம் செய்வதால் அதன் வலுக் குறைந்து விட்டது. அத்தோடு கணனி (Computer) போன்ற உபகரணங்கள் புத்தியையும் மந்தமடையச் செய்கின்றது. நடக்கக் கூடியவன் கக்கதண்டம் கொண்டு நடந்தால் கால் சூம்பி முடவனாகிவிடுவானன்றோ, மேலும், ஆன்மீக உணர்வுகளை வெளிப்படுத்தும் கவின் கலைப் படைப்புக்களையும் இக்கருவிகள் உற்பத்தி செய்யத் துவங்கிவிட்டதால் மனிதனுடைய ஆன்மீகக் கலைத்திறனும் படிப்படியாய் எம்மிடையே மறைந்துவிடும். இறுதியில் மனித வாழ்க்கை இயற்கை வளமில்லாத பாலைவனத்தைப் போல் சலிப்படையும். இதில் புள்ளும் பாடாது, குயிலும் கூவாது. எனவே இத்தகைய துணைக்கருவிகளை அத்தியாவசியமின்றிப் பயன்படுத்தினால் மனிதன் தன் பல ஆற்றல்களையும் போக்கடித்து, தான் படைத்த கருவிகளுக்கே அடிமையாவான். இறைவன் தந்த 'தாலந்தைப்'' புதைத்து வைத்தவன் போலாவான்.

விளம்பரங்களிலும், அரசியலுரைகளிலும் தகவல் தருவதைவிட உணர்வலைகளைத் தூண்டவும், தாளிகைகளில் பக்கங்களை நிரப்பும் நோக்குடனும் சொற்கள் இன்று மட்டுமிதமின்றி ஆளப்படுகின்றன. நற்செய்தி அறிவிப்பதில் இம்முறைகையாள்வது தப்பறையாகும். ஏனெனில் மறையுண்மைகளை அழுத்தந்திருத்தமாகக் கற்பிக்கவேண்டும். கருத்தரங்குகளிலும், ஆலோசனைக் கூட்டங்களிலும் பலர் தங்கள் கருத்துக்களையும், தங்களையும் கூட அறிமுகப்படுத்துவதில் தாரையாகச் சொற்களை பொழிந்து பொன்னான நேரத்தையும் செலவிடுவார்கள். ஆனால் பிறர் கருத்துகளுக்குச் செவிகொடுப்பதுமில்லை, எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்ற முன்வருவதுமில்லை. நம்முன்னோர் தாங்கள் செய்ததைப் பின்னே பறைசாற்றினர். இன்றையவர்களோ தாங்கள் செய்வதாகத் தம்பட்டமடித்துக் கூவியதையும் கூட செய்து முடிக்கத் தவணைசொல்லிக் கொண்டிருப்பார்கள். இத்தகைய வெறும்பேச்சினால் இறையரசு தேய்ந்து போகுமே தவிர ஓங்கிவளராது. எனவே நாம் ஒவ்வொருவரும் அவரை இவரை நம்பியிராமல், இறைவனையே நம்பி, சீரழிந்து போகும் நம்நாட்டைமீட்கும் பணியைத் துரிதப்படுத்துவோமாக! உலகவரலாற்றிலும், திருச்சபையிலும் பெரும் மாற்றங்கள் உண்டாயின. தனிப்பெரும் புள்ளிகளாலேயே இக்கட்டான இக்காலகட்டத்திலும் இறைவன் நம்மத்தியில் ஒருசில அருங்கொடைப் புனிதர்களை அனுப்புமாறு இடைவிடாது வேண்டுவோமாக!

உலகெங்கும் இன்றைய இளைஞர் நீதி நியாயத்திற்கும், சமத்துவத்திற்கும், ஜனநாயகத்திற்கும் தங்களைத் தியாகம் செய்யத் தயாராயுள்ளனர். இவ்விளைஞர்கள் கிறிஸ்து விடுக்கும் உன்னத சவால்களை உணரவைத்து, உயர் விழுமியங்களைக் கடைப்பிடிக்க இவர்களை ஊக்குவிக்க வேண்டும். (Motivate). உலகை மீட்க கிறிஸ்து தேர்ந்த சிலுவையின் மறை பொருளை புனித சின்னப்பர்போல் இடைவிடாது போதித்து சாட்சியமும் வழங்க வேண்டும்.

அரசியல் சமூக மற்றும் பல துறைகளிலும் வஞ்சிக்கப்பட்ட இளம் சமுதாயம் நேர்மையையும், திறந்த மனப்பான்மையையும், சூதுவாதில்லாத எளிய மனத்தையும் விரும்புகின்றனர். அகத்துள்ளதை புறத்தே பிரதிபலிக்காத பொருளிழந்த ஆசாரங்களையும், வாடிக்கையான அனுட்டானங்களையும் சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றனர். இளைஞருக்கும் மூத்தோருக்குமிடையே உள்ள வேற்றுமைக்கு உண்மையான காரணம் வயதல்ல ஆனால் போதிய தொடர்பின்மையே (Not age gap but communication gap). எனவே பரம இரகசியம் போல் அதிகாரத்தைக் கட்டிக்காக்கும் மனப்பான்மையை விடுத்து மூத்தோர் இளைஞருடன் கலந்து உரையாடல் இன்று அத்தியாவசியம். நம்பிக்கை பதில் நம்பிக்கை பிறப்பிக்கும். (Trust-begets trust) ஆனால் உரையாடல் என்ற போர்வையில் நம்பிக்கைத் துரோகம் செய்தால் உரையாடல் குறையாடலாகும்; உரையாடல் என்ற சொல்லும் அனர்த்தமாகிவிடும்; பேச்சுவார்த்தையும் ஸ்தம்பித்து விடும்.

(தொடரும்)

# மரியாயின் சேனையாளர்களின் உள்தியானம்

மேற்படி தியானம் மடுத் திருப்பதியில் 25-8-89 தொடங்கி 27-8-89 வரை நடைபெற்றது. மன்னார் மறை மாவட்டத்திலுள்ள பல பங்குகளிலும் இருந்து ஏறத்தாழ 500 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

நற்கருணை வழிபாட்டின் பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆன்மீக இயக்குனர் அருள்திரு. எஸ். எமிலியானுஸ் பிள்ளை அவர்களின் அருளுரையுடனும், வரவேற்புரையுடனும் இந்த உள்தியானமானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவருடைய அருளுரையானது இக்கால நோக்குடன் பின்னிப் பிணைந்திருந்தது.

அடுத்த படியாக மன்னார் கொமிற்சியத்தலைவர் செ மரியதாசன்பீரிஸ் அவர்கள் தமது உரையில் மரியாளைப் பற்றிய பொய்ப்பிரச்சாரங்கள் மத்தியில் மரியாயின் சேனையாளர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

இந்த உள்தியானத்தின் ஞானவழி காட்டியாக அருள் திரு. இம்மானுவல்யேசுதாசன் அ. ம. தி. அவர்கள் கலந்து கொண்டார். அவர் ''பங்குகளில் பக்திச் சபைகளின் பங்களிப்புப்பற்றி பேசுகையில் [illegible] சபையினர் கிறிஸ்துவின் மதிப்பீடுகளான உண்மை, நேர்மை சத்தியம் என்ற கிறிஸ்வின் உயர்ந்த கோட்பாடுகளை வெளிப்படுத்தும் சாட்சியம் பகரும் புளிக்காரமாக, ஒளியாக, உப்பாக விளங்க வேண்டுமென்று கூறினார். தொடர்ந்து ''இரட்சணிய அலுவலில் மரியாளின் பங்கு'' பற்றியும் எடுத்துக் கூறினர்.

யேசுதாசன் அடிகளாரின் இரண்டாம் நாள் உரையில் ''நற்செய்திகளின் மதிப்பீடுகளுக்கமைய மரியாளின் விசுவாச வாழ்வு'' இதையொட்டி மரியாள் இறைவனின் மீட்புத் திட்டத்திலே என்ன விதத்தில் பங்கு கொண்டாள் என்பதைப் பற்றி எடுத்தியம்பினார்.

தியாகத்தின் உச்சக்கட்டமாகிய உளமாற்ற வழிபாட்டில் உரையாற்றுகையில் கடவுள் ஒளியாய் இருப்பது போல நாமும் ஒளியாக இருக்க எமது பாவ வாழ்க்கையில் இருந்து படிப்படியாக விலக வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. 3-ம் நாள் நிகழ்ச்சியில் பக்திச் சபையினர் மரியாள் பக்தி, புனிதர் வழிபாடு பற்றி கலந்துரையாடிய போது எல்லா இடங்களிலும் மரியாள் பக்தி பற்றி எழுப்பப்படுகின்ற பிரச்சினைகளுக்கு மிக தெளிவாகவும், ஆதாரங்களுடனும் அடிகளாரால் விளக்கமளிக்கப்பட்டது.

சேனையாளர்கள் தங்கள் பணிகளின் போது ஏற்படும் பல பிரச்சினைகளையிட்டும் மனந்திறந்து கலந்துரையாடினர். பிரச்சினைகளை அணுகித் தீர்க்க முறைகளையும் ஆர்வமுடன் ஆராய்ந்தனர்.

மன்னார் கொமிற்சிய செயலாளர் தொடர்ந்து பேசுகையில் பிரசீடியங்களின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பு மனப்பான்மை கொண்ட இளைஞர்களும், யுவதிகளும் கூடுதலாகப் பங்கேற்று பணிபுரிய வேண்டும் என்றும் இப்பணியில் சேனையாளர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மன்னார் பிரசீடியத்தின் செயலாளர் திரு ஜெ ஈ. இராசநாயகம் திருவுரை வழங்கிய யேசுதாசன் அடிகளாரின் கருத்துக்களைத் தொகுத்து உரைத்தார்.

விடத்தல் தீவு கியூறியாவைச் சேர்ந்த சகோதரர் பி இராயப்பு நன்றியுரை வழங்கினார்.

மடுத்திருப்பதியில் மூன்று நாட்கள் நடைபெற்ற ஆராதனைகளும், வழிபாடுகளும், திருவுரைகளும் சேனையாளர்களை புதிய தெம்புடன் சேனைப் பணிகளைத் தொடரக்கூடிய வகையான உளமாற்றத்தைக் கொடுத்துள்ளதான நிலையை பலரும் அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத்தளங்களில்....

## ஊர்காவற்றுறையில்

ஊர்காவற்றுறை பங்கில் உள்ள உறுதிபூசுதல் பெறுத மாணவர்கள், பொது நிலையின ருக்கு உறுதிபூசுதல் பெறுவதற் கான ஆயத்த வகுப்புகள் நடத்துவதற்காக மறை ஆசிரி யர்களுக்கு ஐப்பசிமாதம் 21-ம் திகதி சனிக்கிழமை மாலையும், 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் அருள்திரு. பிலிப் அடிகளாரால் பயிற்சி கருத்தரங்கு நடாத்தப்பட் டது. இதில் 20 மறை ஆசி யர் கள் கலந்து கொண்டனர். மாணவர்கள் எவ்வாறு உறுதி பூசுதல் என்னும் அருட்சாத னத்தை பெறுவதற்கு தகுதி யுடையோராக வேண்டும் என்பதனையும், ஞானஸ்நானத் தின் மூலம் நாம் எவ்வாறு இறைவனின் பிள்ளை என்ற உறவைப் பெறுகின்றோம், நற் கருணையில் அவர் உண்டு எம்மை சமூகத்திற்த எவ்வாறு உடைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் விளக்கமாகத் தெளிவு படுத்தினார். இக்கருத்தரங்கை ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருள்திரு. கிருபானந் தன் அடிகளார் ஒழுங்கு செய் திருந்தார். 22-ம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை உறுதிபூசுதல் வகுப்பை மறை ஆசிரியர் எவ் வாறு நடத்த வேண்டும் என்று மறைக்கல்வி மாணவர்கள் மூலம மறை ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பொன்று நடத் திக்காட்டினார்.

நீற்ரு சிவந்தி கொலின்ஸ்

★ ★ ★

## குருநகரில்...

அருள் திரு பி. எம். இம் மனுவல் தலைமையில் அருள் சகோதரியாக கடந்த 15-10-89 திருநிலைப்படுத்தப்பட்ட அருள் சகோதரி மேரிஜெயா அவர் கட்கு 21-10-89 சென். ஜேம்ஸ் ஆலயப்பங்கு மக்களால் வர வேற்புவிழா நடத்தப்பட்டது சகோதரி மேரி ஜெயா அவர்கள் குருநகர் வாழ் தி. எஸ் என். பயஸ் அவர்களின் புதல்வியும் அருள்திரு இருதயதாஸ் அவர் களின் சகோதரியுமாவார். காலை 8 மணிக்கு ஆரம்பமாகிய நன்றிக் கூட்டுத்திருப்பலியை ஐந்து அருட் தந்தையாகள் நிறை வேற்றினார்கள். உரை யாற்றிய அருட் தந்தை ஜேசு தாசன் அடிகள் தேவ அழைத் தல் சிறுவயதில்நாம் பெறும் அருட்சாதன மாகிய ஞானஸ் நானம்மூலம் வருகிறது என்றும் தன்னை முழுவதும் இறைவனுக் காக இழந்தால்தான் அழைத்தலைப் பெற முடியும் என்றும் தன் சொத்துக்களை இழக்கவிரும்பாத ஒரு பணக் காரனின் உவமை மூலம் அழ காக எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து அருட் சகோ தரிக்கு பங்குத்தந்தை இம்மனு வல் அடிகள் சார்பில் வரவேற்பு உபசாரம் நடைபெற்றது. வர வேற்புரையை குருநகர்கிராம சவையாளர் திரு.ரூ அன்ரன் அவர்களும், பங்குச்சபையின் சார்பில் திரு நீ. தார்சிசியஸ் ஆசிரியர் அவர்களால் சிறப்பு ரையும் பாடகர் குழாமின் சார் பில் இனியவாழ்த்துப்பாடல் களும், அருட் சகோதரியின் மனமுவந்த நன்றியுரையும் இடம் பெற்றது.

நிறைவாக விழாவை முன் னின்று நடத்திய அருள் திரு. பி. எம். இம்மனுவேல் அவர் களின் ஆசிர் உரையுடனும், சிற்றுண்டி உபசரணையுடனும் விழா இனிதே நிறைவு கொண் டது.

அ. பிறிட்டோ குருஸ்
குருநகர்

★ ★ ★

## மன்னரில்....

மன்னர் மாவட்டத்தில் அமைந்துள்ள மடுமாதா சிறிய குருமடத்தின் பாதுகாவலியா கிய மருதமடுச் செபமாலை அன்னையின் திருவிழா 14-10-89 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட் டது. மாலைகள் மகரதோர ணங்களால் குருமட மண்டபம் அழகாகக் காட்சி தந்தது. மன் னார் மறை மாவட்ட ஆயர் மேன்மை மிகு தோமஸ் சவுந் தரநாயகம் அவர்களின் வரு கையை எதிர்பார்த்து குருமட அதிபர், குருக்கள், அருட் சகோதர சகோதரிகள், அழைக்கப்பட்ட பொது நிலை யினர், குருமட மாணவர்கள் காத்திருந்தனர். காலை 7.00 மணிக்கு ஆயரவர்கள் அடியெ டுத்து வைத்ததும் மாலை அணி வித்து, ஆலாத்தி எடுத்து அழ குறத் திலகமிட்டு மங்கல விளக் கேற்றிப் பலிபீடம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார். ஆயர் அவர்களுடன் குருமுதல் வரும் குருமட அதிபருமான வண. பிதா சேவியர் குரூஸ், வணபிதா ஞானதிக்கம் அடி களும் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

ஆயர் தமதுரையில் மறை பரப் தல் பற்றி மிகவும் விரி வாக எடுத்துக் கூறினார். இன் றும் பல பொதுநிலையினர் மறைபரப்புப் பணியைத் தாங் களே உணர்ந்து செய்கின்றார் கள் என்பதையும் நல்லதொரு உதாரணத்துடன் விளக்கினார். திருப்பலி முடிவில் மருதமடு அன்னையின் பாடலுடன் திருப் பலி இனிதே நிறைவேறியது. வருகைதந்த அனைவரையும் குருமட அதிபர் அவர்கள் அன்புடன் வரவேற்று நன்றிகூறி காலை உணவில்பங்கு பற்றிச் செல்லுமாறு அன்பு டன் கேட்டுக்கொண்டார். திருக்குடும்பக்கன்னியர் தயா ரித்த காலை உணவில் அனைவ ரும் பங்குபற்றி குருமட அதி பருக்கும், குருமட மாணவர்க் கும் நன்றி கூறி விடை பெற் றனர்.

அன்று மாலை புனித சவேரி யார் ஆண்கள் கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் மாலை 4.00 மணியளவில் டி லாசால் விடுதி மாணவர்க்கும் குருமட மாணவர்க்குமிடையே ஒரு சிநேக பூர்வமான உதைபந் தாட்டப் போட்டி ஒன்று இடம்பெற்றது. விளையாட்டில் பங்கு பற்றிய வீரர்களுக்கு சிறிய குருமட இல்லத்தில் தேநீர் விருந்து கொடுத்து உபசரித்தனர்.

இவ்விழாவை மிகவும் சிறப் பான முறையில் கொண்டாடு வதற்கு எங்களுக்கு உதவிய அனைத்துக் குருக்கள், துறவி கள், வேறு பல உபகாரிகள், குறிப்பாக மேன்மை தங்கிய ஆயர் அவர்கட்கும், எங்க ளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து எங்களை ஊக்குவித்த எங்கள் அதிபருக்கும் இறை ஆசீரோடு எங்கள் வாழ்த்துக் களையும், நன்றிகளையும் கூறிக் கொள்வதோடு எங்களுக்காக மன்றாடும் படியும் கேட்டுக் கொள்கிறோம்.

— ப. ஞானராஜ்
மடுமாதா சிறிய குருமடம்
மன்னார்.

★ ★ ★

## புதுக்குடியிருப்பில்...

புதுக்குடியிருப்பு சென் யோசப் இளைஞர் ஒன்றியத் தினர் அயல்கிராமமான வலை யன் மடத்தில் இரண்டு நாள் பாசறை அமைத்து சந்தோஷத் துடன் ஒன்றித்தனர். மேலும் சகல இளைஞர்களும் பங்கு கொள்ளும் வகையில் பல நிகழ்ச்சிகளையும் நடாத்தினர். பாசறைத்தீபத்தை பங்குத் தந்தை அருள்திரு, ஜெபரட் ணம் அடிகளாரும் அருள்திரு. ஸ்ரலின் அடிகளாரும் மூட்டி வைத்தனர். பாசறை நிகழ்ச்சி களுக்கு திரு. ப. யேசுதாசன் தலைமை வகித்தார். ஒன்றியத் தின் தலைவர் செல்வன் J அன் ரன் பிலிப்பு. இந்த இக்கட் டான காலகட்டத்திலும் முப் பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் ஒன்று கூடியிருப்பது இறைவன் திருவருளே எனககூறி வரவேற் புரை நிகழ்த்தினார். பாசறை நிகழ்ச்சிகள் யாவற்றையும் மறையாசிரியர் யா. மரியரட் ணம், செல்வன் ஆ. அன்ரனி தாசன் ஆகியோர் நெறிப்படுத் தினர். சிறப்பு நிகழ்வுகளாக கடற்குளிப்பு, நீச்சல் போட்டி என்பனவும் இடம பெற்றது. பாசறையை மட்டுக் கலைந்து செல்கையில் ஒன்றிய செயலா ளர். யே யேசுதாஸ் அவர்கள் நன்றியுரை வழங்கி மீண்டும் இப்படியான இனிய நிகழ்ச்சி களுக்கு அனைவரின் ஒத்துழைப் பையும் வேண்டி விடை பெற் றார். அனைவரும் சந்தோஷத் துடன் கலைந்து சென்றனர்.

தகவல் :- J. J. தாஸ்

### சந்தா

பாதுகாவலன் பத்திரிகை யைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள ஒரு ஆண்டுக்கான சந்தா 100/- மட்டுமே. 27.10.89 பாதுகாவலனில் இது 75/- என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டதற்கு வருந்து கிறோம். (ஆ-ர்)




**புனித மார்ட்டின் தெபோரஸ்-**
**நவம்பர்- 3 (கி. பி. 1579- 1639)**

இவர் 1579 ஆம் ஆண்டு பெரு மாகாணத்தில் லீமா நகரில் பிறந்தவர். இளம் வய திலே நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது இவரது வழக்கம். பின்னர் டொமினிக் கன்சபையில் சேர்ந்து ஏழைக ளுக்கு பெரிதும் உதவினார். திவ்விய நற்கருணைநாதர் மீது அளவு கடந்த பக்தி கொண் டிருந்தார். துறவற வார்த் தைப்பாடு கொடுக்கத் தான் தகுதியற்றவனென்று 9 ஆண்டு கள் வரை சொல்லி வந்தார். பின்னர் சபைச்சகோதரர்கள் இவரைப் புரிந்துகொள்ள வைத்தனர். ஜெபம், தவம், நோயாளிகளுக்கும், ஏழைகளுக் கும் சேவை, மறைக்கல்வி கற்பித்தல், இவை அனைத்தி லும் அக்கறை காட்டியவர் தனது 60 ஆவது வயதில் மரித்தார்.

**புனித சார்லஸ் பொரோமேயா**
**நவம்பர் 4 (கி பி. 1538-1584)**

16 ஆம் நூற்றாண்டில் திருச் சபையின் மங்காத மாணிக்க மாகத் திகழ்ந்தவர். தனது மானிலமான மிலானில் ஆன்ம இரட்சணிய அலுவலில் இரவு பகலாகநேரத்தைச் செலவழித் தார். 10 ஆண்டுகளாக செய லற்றுக் கிடந்த திரிதெந்தீன் சங்கத்தைப் புதுப்பித்து இறுதி யில் ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டுவர அரும்பாடுபட் டார். 27 ஆவது வயதிலி ருந்து 46 ஆவது வயது வரை மிலான் நகரின் ஆயராகப் பணிபுரிந்தார். ஏழைகளைப் பராமரிப்பதில் ஏராளமான பணங்களைச் செலவிட்டார். ஆனால் தான் மட்டும் ஏழ் மையாக வாழ்ந்தார். பிளேக் நோய்சகாலத்தில் கடுமையாக உழைத்தார். இத்தகைய அரும் பெரும் முயற்சிகளால் உடல் நலம் பாதிக்கப்பட்டு 46 ஆவது வயதில் மரித்தார்.

**லாத்தரன் பேராலய அபிஷேகம்**
**நவம்பர் 9**

இப்பேராலயம் மன்னன் கொன்ஸ்தான்தைன் என்பவ ரால் எழுப்பப்பட்டது. திருத் தந்தை சில்வெஸ்டர் இவருக்கு ஞானஸ்நானம் கொடுத்த அதே இடத்தில் இவ்வாலயத் தைக்கட்டி எழுப்பினான். சுமார் ஓராயிரம் ஆண்டுகளாகத் திருத்தந்தையர்கள் இவ்வால யத்தருகில் தங்கினார்கள். அவிஞான் நகருக்குச் சென்று திருத்தந்தையர்கள் தங்கிய நாள் முதல் இவ்வாலயத்தின் மகிமை மங்கத் தொடங்கியது. அதோடு இவ்வாலயம் தீயினால் பாதிக்கப்பட்டது. இப்போ துள்ள இதே பெயர் கொண்ட பேராலயம் 16 ஆவது 17 ஆவது நூற்றாண்டுகளில் முழுமையடைந்தது.

S. S. கருணைதாஸ்.
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

## செபமாலை அன்னை

செபமாலை சொல்லும் ஒரு
படையைத் தாருங்கள்
உலகை நான் வெற்றி கொள்வேன்
என்றுரைத்தார் ஒன்பதாம் பத்திநாதர்

இது முற்றிலும் தகுதிவாய்ந்த உண்மை
செபமாலைப் பக்தியால் ஆயிரக்கணக்கான
மத போதகர் சத்திய மறையில் சேர
செபமாலை அன்னை வழிவகுத்தாள்

செபமாலைப் பக்தியாயிருந்த பலருள்
புனித சாமிநாதர் மூலம்
ஆயரக் கணக்கான பேய்களை ஓட்டி
செபமாலையின் வல்லமையைக் காண்பித்தார்

திருப்பலிதான் திருச்சபையின் முதலிடம்
யேசு தம் பிதாவுக்குச் செலுத்தும் பலி
திருச் செபமாலையோ இரண்டாமிடம
அது திருத்தாயார் திருமகனிடம் கையளிப்பது

செபமாலை அன்னை எம்மை
யேசுவிடமே அழைத்துச் செல்கின்றாள்
அவரது மீட்பின் பலனை என்றுமே
ஆன்மாக்களுக்கு அளிப்பதே அன்னை பணி

செபஸ், உடுவில்

## நங்கையரும், நாடுகளும்

(1) ஒரு நல்ல பெண் இருக்கும் வீட்டில் ஆனந்தம் ஜன்னல் வழியாகச் சிரிக்கிறது. (ஸ்கொட்லாந்து)

(2) பொன்நகையை விட பெண்களின் புன்னகையே மேன்மையானது. (இத்தாலி)

(3) ஒரு கற்புள்ள பெண்ணைப்பற்றி மோசமாகப் பேசுவதை விட ஒரு கோயிலை இடிப்பது குறைந்த பாவம். (ரஷ்யா)

(4) பெண்ணால் காப்பாற்ற முடிந்த ஒரே இரகசியம் அவளின் வயது. (பிரான்ஸ்)

(5) அவதூறு நல்ல பெண்ணின் வீட்டு வாசலில் பலமிழந்து மாய்ந்து விடுகிறது. (டென்மார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்து

சில மரங்களும், செடிகளும் வெட்டி எறியப்பட்டபின் அவற்றின் அடிப்பாகம் அல்லது வேரிலிருந்து புதியதளிர்கள் கிளம்பி, அவைமரங்களாக, செடிகளாக வளர்வதை நாம் பார்த்திருக்கிறோம். அதுபோலத் திருச்சபையும் வளர்ந்திருக்கிறது. திருச்சபையின் தொடக்க காலத்தில் அதன் விரோதிகள் திருச்சபையை அழித்திடப் பெரிதும் முயன்றனர். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொன்றனர். அதைத்தான் வேதகலாபனை என்கிறோம். வேதகலாபனையின் போது பல கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை உறுதியாய் இறுதிவரை காத்து நின்று வேதத்துக்காக இரத்தம் சிந்தி, தங்கள் உயிரையும் தத்தம் செய்தார்கள்.

உரோமாபுரியில் கொலோசியம் என்னும் வட்டவடிவமான விளையாட்டு அரங்கம் ஒன்று சிதைந்தநிலையில் இன்று காட்சியளிக்கிறது, இதன் நடுவேயுள்ளமண், செந்நிறமாக இன்றும் கிடக்கிறது. அந்தக் காலத்தில் கிறிஸ்தவாகள் வதைக்கப்பட்டது இங்குதான்; கொடிய விலங்குகளின் முன்பாகப் போடப்பட்டு அவ்விலங்குகளால் அவர்கள் கிழித்தெறியப்பட்டு இரத்தம் சிந்தி மரித்ததும் இங்குதான். இக்காட்சியைப் பல இரக்கமற்ற மனிதர், மேலே அரங்க மேடைகளில் அமர்ந்தபடி பார்த்து இரசித்தனர். இன்று அவ்விடத்தில் ஒரு சிலுவை நாட்டப்பட்டுள்ளது. இந்தக் கொலோசியத்தைப் பார்க்கச் செல்லும் பயணிகள் 'எங்கள் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தஇடம்' என்று அவ்விடத்தை முத்தமிடுகின்றனர். ஆம், எத்துணை அளவிற்கு கிறிஸ்தவர்கள் வேதத்தில் உறுதியாய் நின்றனர். அதைக் கண்டு வேற்று மதத்தவர் மனந்திரும்பி கூட்டம் கூட்டமாகக் கிறிஸ்தவர்களாக மாறினர். எனவேதான் – ''வேதசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்து'' – என்ற பொனமொழி பிறந்தது.

செல்வன்:

எஸ், ஏ. குமார்

மாட்டீனர் குருமடம்,

யாழ்ப்பாணம்.

* * *

## இளைய சமுகமே இவர்களை மறவாதே

விதை போடாமல் செடி வருவதில்லை. ஆம் விதையானது தன்னை மண்ணுள் மடித்து தன்னிலும், விடப் பெரிதான செடியை உருவாக்குகின்றது. அச்செடி மூலம் உலக ஜீவன்கள் நன்மை பெறவேண்டும் என்ற ஆவல்தான் அதற்கு.

இளைஞர்களே! விதைக்கு உங்கள் பெற்றோரையும், செடிக்கு உங்களையும் ஒப்பிட்டுப்பாருங்கள். ஆம் பெற்றோர் இன்றி நாம் வந்ததில்லை. பத்துமாதங்கள் நொந்து பெற்றவளும், நித்தம் பாசத்தைக் கொட்டி வளர்த்தவர்களுமே உங்கள் அன்னையும், தந்தையும் ஆவார். சமுதாய உலகில் நீங்கள் உயர வழிகோலியவர்கள் அவர்கள்தான். குழந்தைப் பருவத்தில் உங்களைப் பாலூட்டிச் சீராட்டி, பள்ளிப்பருவத்தில் பாராட்டி, பாடம் கற்பித்து இளைய பருவத்திலும் உங்களின வாழ்வை இமயம் போல் உயர்த்துபவர்கள் உங்கள் பெற்றோர்தான். உங்களை உலகறிய உயர்த்திய பெற்றோரை நீங்கள் மூவுலகும் அறிய அவர்களை உயரத்தில் வைக்க வேண்டும். நீங்கள் கடனாளிகள். உங்கள் கடன் தீர்க்கப் படவேண்டுமாயின், முற்றுப் பெறவேண்டுமாயின் பெற்றோருக்கு மதிப்பளித்துப் போற்றி வாழுங்கள். எங்கள் சிந்தனைக்கு இவர்கள் இடைஞ்சல் என்கிறீர்களா? உங்கள் வளர்ச்சிக்கு இவர்கள் மூலைக்கற்கள் அதை மறந்து விடாதீர்கள். அன்னை நாள் தோறும் உணவூட்ட நெருப்போடு போராடுகருள். தந்தை வழிகாட்ட தன்னை நெய்யாக்கி உருக்குகின்ருன். இருவருக்கிடையில் புது ஒளி துலங்குகிறது, அது நீங்கள் தான். எனவே பெற்றோரை மதித்துப் போற்றி வாழுங்கள். மறந்துவிடாதீர்கள் அவர்களின் உதிரம் உங்கள் உடம்பில் ஓடிக்கொண்டிருக்கிறது. வாழும்வரை அவர்களை வையகத்தில் வானகம்வரை உயர்த்துங்கள். உங்கள் இலட்சியங்களுக்கு முன் அது உங்களின் கடமையாக உள்ளது.

D. E. ரட்ணராஜ்.

செனிஜேமஸ்

இளவாலை.

அ. ம. தி. குருமடம்

கொழும்புத்துறை

3-11-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு

உங்களது உள்ளக் கதவுகளை மெல்லத் திறவுங்கள். உயிருக்கு உயிராய உங்களோடு உறவாடி உலகை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் உளளத்திலிருந்து மறையாத உற்றுர், உறவினர், நண்பர்களுக்காக விசேடவிதமாகச் செபிக்கும் இம்மாதத்திலே கல்லறைகளை அலங்கரிப்பதிலேயே உங்களது பணி முடிந்துவிட்டது என்று எண்ண வேண்டாம். அன்றேல் உங்கள் உறவினரோடு சேர்ந்து உண்டு, உறவினருக்கே தானம் செய்து உங்கள் பெருமையைப் பறைசாற்றுவதன் மூலம் அவர்களது ஆன்மா சாந்தியடையும் என்று எண்ண வேண்டாம். அன்றேல் அவர்களது நினைவாகத் திருப்பலிக்குக் காசு கட்டியதன் மூலம் நான் எனது கடமையை நிறைவேற்றி விட்டேன் என்ற திருப்தியடையவேண்டாம்.

மாருக ஒறுத்தல், மன்னித்தல், உறவாடுதல், இல்லாதோர்க்கு ஈதல் போன்ற நன் முயற்சிகளில் ஈடுபடுங்கள். அன்பைத் தேடும் இதயங்களை நாடிச் செல்லுங்கள், இதையே இறைமகன் கிறிஸ்து அன்று கூறினர்.

''பசியாய் இருந்தேன், எனக்கு உணவுக் கொடுத்தீர்கள்.
தாகமாய இருந்தேன, எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள்.
அன்னியனுய் இருந்தேன், என்னை வரவேற்றீர்கள்.
ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினீர்கள்.
நோயுற்றிருந்தேன, என்னைப் பார்க்கவந்தீர்கள்
சிறையிலிருந்தேன், என்னைக் காணவந்தீர்கள்''

(மத். 25/35-36)

நல்வாழ்த்துக்களுடன்,

அன்பு நெஞ்சன் வி. பி.

### குருசுமுத்தண்ணையின் கிசு கிசு —49

அடைக்கலம்:- இப்பத்தைய இளசுகளுக்கு கதைக்கப் பேசக் கூடத் தெரியேல்லை அண்ணே?

குருசுமுத்தண்ணை:- ஏன் தம்பி, இளசுக்கு பழசுகள் தான் முன்மாதிரியாய் இருக்கவேண்டும், ஆனால் பழசுகளும் இப்ப கதைக்கிறதப் பாத்தா இளசுகள் தேவல்ல போல கிடக்கு!

அடைக்கலம்:- அப்ப என்ன அண்ணை செய்யிறது?

குருசுமுத்:- பண்பாடு, பழக்க வழக்கம், பேச்சு வார்த்தை எல்லாம் ஒவ்வொருவருக்கும் படிப்பிச்சு சட்டம் போட்டு வளருகிறதல்ல, ஒவ்வொருதரும் உணர்ந்து பழகிக்கொள்ள முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினுல் மற்றவையளும் பாத்துத் திருந்துவினம் பாரு... எல்லாம் வார்த்தையில வயதில இல்லை வாழுற நிலையிலதான் இருக்குதம்பி!...



## 2. ஆணும் பெண்ணும் வித்தியாசமானவர்கள்

பொருத்தம் பார்ப்பது என்பது சாதகம் பார்ப்பதல்ல. நம்பர்களைக் கூட்டுவதல்ல. சகுனங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வதல்ல. திருமணத்தில் இணையும் இருவரும் நிர்ணயிப்பது திருமணம். நாளும், கோளும், கைரேகைகளும் நிர்ணயிப்பது திருமணமல்ல'

தன்னுடன் வாழப்போகும் பெண்ணே ஆணே தன்னைப்போல இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பது தவறு.

ஆண், பெண்ணிலும் வித்தியாசமானவன். பெண் ஆணிலும் வித்தியாசமானவள்.

இந்த வித்தியாசங்களைக் கொண்டு ஆண் பெண்ணைவிட மேலானவன் என்றோ, பெண் ஆணைவிட மேலானவள் என்றோ முடிவெடுப்பது தவறு.

சுமை சுமக்க இரு கைகள் தேவை. என்பது போல், குடும்பம் என்ற உறவில் வித்தியாசமான பண்புகள் தேவை, அவற்றை இப்போ பார்ப்போமா?

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

1. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் உறவே திருமணமாகும். ஆணும் பெண்ணும் உடலால் வேறுபட்டவர்கள் ஆயினும் உளத்தாலும், மனத்தாலும் அதிகம் வேறுபட்டவர்கள். மானிடர் என்ற பொது அமைப்பில் இருவரும் சமமானவர்களே மேற்கூறிய வித்தியாசங்கள் அல்லது வேற்றுமைகள் அவர்களது நடத்தைகளில் பிரதிபலிக்க காணலாம். இயற்கையான இவ் விகற்பங்கள் கணவன் மனைவி உறவுகளிலும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன எனலாம்.

பொதுவாக ஆண் முயற்சியுடையவன், செயலிலிருந்தவன், எதற்கும் முன்னுக்கு செல்லும் இயல்பு வீரம், துணிவு, திரச்செயல்களிலீடுபடுதல் என்பன அவனது சிறப்பியல்புகளாக இருக்கின்றன. இருப்பதைப் பாதுகாப்பது அல்லது ஈட்டிக் கொண்டதைக் காப்பது, கருத்துக்களையும், பரிந்துரைகளையும் ஏற்றுக்கொள்வது போன்ற பண்புகளுள்ளவள் பெண். ''தாராள மனப்பான்மையும்'' பாதுகாக்கும் பண்பும் பெண்ணுக்கு இயல்பானது உயிரின் பாதுகாவலி அவள், வழக்கு டிப்பவள். அடிக்கடி ஏற்படும் உத்தியோக மாற்றங்கள் இருப்பிட மாற்றங்கள் என்பன ஆணைவிட பெண்ணின் சுபாவத்திற்கு அன்னியமாகத் தோன்றும்.

2. ஒரு ஆண் சுதந்திர புருஷன் துணிவு மிக்கவன்: பிறரில் தங்கியிராமல் தன் காலிலேயே நிற்க விரும்புபவன் பெண் சுபாவத்திலேயே பயந்தவள் பிறரில் தங்கியிருப்பதிலேயே திருப்தி காண்பவள் (எமது பண்பாட்டின்படி) தங்கியிருப்பது அதாவது கணவனில் சார்ந்திருப்பது அழகு. (எனவே கணவன் நம்பிக்கைக்கு பாத்திரமானவராய் இருக்க வேண்டும்) இதன் காரணமாகவே ஒரு ஆணுக்கு தொழில் அல்லது வேலை வாய்ப்பு பொருளாதார சுதந்திரம் பெண்ணைவிட ஆணுக்கு அதிக அர்த்தமுள்ளதாக விளங்குகிறது.

3. நியாய பூர்வமாகவும், பகுத்தறிந்தும் சிந்திக்கும் ஆற்றல் ஒரு ஆடவனுக்கு வலுவூட்டும் சிறப்பியல்பாகும். பகுத்தறியும் துணைகொண்டு அவன் ஒரு சம்பவத்தை அதன் காரணங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள் என்ற அடிப்படையில் அலசி ஆராய்ந்து பார்க்கின்றான். அவனது சிந்தனை ஆற்றல் பெரிது மாறாக ஒரு பெண் உணர்ச்சி வயப்படும் இயல்புடையவள் ஆராய்ந்து பாராமலே ஒரு செயல் நல்லதோ கெட்டதோ, சரியோ தப்போ என்று உணர்ச்சி பூர்வமாகவே நோக்கிப் பார்க்கிறாள். இதனை உடனடி மன உணர்ச்சி அல்லது உள் உணர்வு எனலாம். அவளது தீர்மானங்களும் செயற்பாடுகளும் உணர்ச்சிபூர்வமானதாகவே இருக்கும். அவளுக்கு ''பெரிய உள்ளம்' இதன் காரணமாகவே அவள் ரோசமுள்ளவளாக மனஎழுச்சிகளுக்கு அடிமைப்பட்டவளாக காணப்படுகிறாள். நிலையற்ற மனப்போக்கும், ஸ்திரமற்ற தன்மையும் பெண்ணிடம் உண்டு. அவளின் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் சாதாரணமாக ஒளிவு மறைவற்றதாகவும், வெளிப்படையானதாகவும் இருக்கக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-39

### மலக்கியாஸ்-3.

இஸ்ராயேலர் இறைவனுடன் செய்து கொண்ட உடன் படிக்கை உறவையும், அந்த உடன்படிக்கை உறவை அவர்கள் முறித்துக் கொண்டதையும் கண்டிக்கின்றார். அத்துடன் அவர்களின் திருமண உறவையும், அந்த திருமண உறவை முறிப்பதையும் தவறு எனச் சுட்டிக்காட்டுகிறார்.

நாடு திரும்பிய பின்னர் இஸ்ராயேலர் பலர் அந்நியப் பெண்களுடன் கலப்பு திருமணம் செய்தனர். இக்கலப்பு திருமணம் யூத சமூகத்தின் தூய்மைக்கு குந்தகம் விளைவிப்பதாக இருந்தது சிலயூதர்கள் தங்களது யூத மனைவியரைத்தள்ளி விட்டு அந்நியப் பெண்களை மணந்தனர். யூத ஆண்கள் அந்நியக் கடவுளை வணங்கும் பெண்களை மணப்பது உடன்படிக்கை உறவை முறிப்பதாகும்

ஆண்டவரோடு செய்த உடன் படிக்கையையும், அதன் விளைவான சகோதர உறவையும் முறித்தயூதர்கள். திருமண உடன்படிக்கையையும் முறித்தனர். இறைவாக்கினர் மலக்கியாஸ் அவர்களின் இத்தகைய செயலைக்கண்டிக்கின்றார். பிரமாணிக்கம் தவறாமல் இருக்கும்படி எச்சரிக்கின்றார்.

மேலும் மக்களின் அற்பத்தனத்தைக் கண்டனம் செய்யும் போது மலக்கியாஸ் இறைவனது பிரமாணக்கத்தையும், யூதர்களுடைய பிரமாணிக்கயீனத்தையும் ஒப்பிட்டு வேறுபடுத்துகிறார். இறைவனது காரியங்களுக்கு முதன்மை அளிக்காமைக்கும், சமூகத்தின் பொருளாதார அவலநிலைக்கும் தொடர்பு இருப்பதாக மலக்கியாஸ் கருதுகிறார். இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்தால் இறைவன் மக்களுக்கு வேண்டியதைச் செய்வார் என்கிறார். மழைபொழியச் செய்வார். நிலத்தை மிகுதியாய் பலன் கொடுக்கச் செய்வார் என்கிறார்.

மலக்கியாஸ் இறைவாக்கினர் ஆண்டவரின் நாள் பற்றிய போதகத்தில் இறைவனது நீதியை மறுக்கி ற சமயப்பற்று அற்றவர்களுக்கும் அவரது அன்பைச் சந்தேகிக்கும் மக்களுக்கும் பதில் அளிக்கிறார். ஆலயத்தையும். குருத்துவத்தையும் தூய்மைப் படுத்தி இறைவனது வழியைத் தயாரிக்க இறைவன் தமது தூதரை அனுப்புவார். யாவே இறைவன் மக்களோடு தங்குவார். நடுவராகிய இறைவன் திடீரென்று தோன்றித்தீமை செய்பவர்களையெல்லாம் அழிப்பார் எனக்கூறி அக்கால மக்களிடம் நிலவிய சந்தேகங்களைப் போக்குகின்றார்.

—கி. சா. பங்கிராஸ்

## தியானத்தில் பிறந்த நற்சிந்தனைகள்

தாண்டவன்வெளி புனித வியாகுல மாதா ஆலயபங்கைச் சேர்ந்த வின்சன்ற் டீ பவுல் தருமசபையினர், தமது ஆன்மீக உறுதிக்காக ஒழுங்குசெய்திருந்த தியான வழிபாட்டில், சபை அங்கத்தினரும், அருங்கொடை இயக்க உறுப்பினர் பலரும், பொதுமக்களும் பங்கு பற்றினர். பங்குத் தந்தை அருள் திரு ஜே. எஸ். அரசரத்தினம் அவர்களின் தலைமையிலே ஆடி மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பங்குத் தேவாலயத்தில் காலை 8. 30 மணிக்கு செபமாலைப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகிய தியானம் நண்பகல் திருப்பலிப் பூசையுடன் நிறைவெய்தியது

தியானத்திலே கருப்பொருளாக ஈகை என்ற புண்ணியம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சிறப்புப் பேச்சாளர் மூவர் இதனை வேறுபட்ட கண்ணோட்டத்தில் ஆராய்ந்தனர். முதலாவதாக உரையாற்றிய திரு. ஏ. ஜீ. இராஜேந்திரம் அவர்கள், தருமம் செய்பவர்களின் நோக்கங்களை நால் வகைப் படுத்திக் கூறினார். விளம்பரத்துக்காக மட்டும் தருமம் செய்வோர், தனக்குக் கண்டு தானம் வழங்குவோர், கிறிஸ்தவ கோட்பாடுகளுக்காகக் கொடுப்பவர்கள், தமக்குள்ளவற்றைப பிறருடன் பகிர்ந்து வாழ்பவர் ஆகியவர்கள் பற்றி, நற்செய்தியுரை, பகவத்கீதை, இஸ்லாமியக் கருத்துக்கள், அன்னை தெரேசாள், திரு பிரட்றிக் சொன்னம் ஆகியோரின் செயல்கள் மூலமாகத் தெளிவாக விளக்கிக் காட்டினர்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய அருட்சகோதரி எம் யூஸ்டீனு அவர்கள், இறைவனே முதற் கொடையாளி எனக் கூறினார். இறைவனிடத்திலிருந்து தோன்றிய வள்ளன்மை, படைப்பிலே பிரதிபலிக்கப்படுகின்றது. இறைவன் இலவசமாகத் தந்தவற்றை நாம் பிறருடன் பகிர்ந்து வாழ வேண்டும் என அருட்சகோதரி வலியுறுத்தினார்.

தொடர்ந்து கருத்துக்களை வழங்கிய அருள்தந்தை போல் சற்குணநாயகம் அடிகளார், நாம் பாரம்பரிய ஈகை முறையிலிருந்து மாறி. தற்கால உலகின் தேவைக்கேற்ப நமது தருமப் பணியை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக நேயர்களே!

மனித வாழ்வில் எல்லாவற்றையும் அனுபவித்து- சுவைத்த அதிலே வெற்றி பெறாத ஒருவன் கனைத்து குரல் எழுப்புகின்றான். "பணம் என்னடா பணம் பணம்- குணம் தானடா நிரந்தரம்" என்று. பணத்தை விட குணமும், கொள்கையும் மேலான ஒன்றல்லவா!

இன்று பணத்திற்காகவும், பதவிக்காகவும், பட்டங்களுக்காகவும் ஓடி அலைந்து திரியும் நம்மவர்களை தடுத்து நிறுத்தி இடித்துக் கூறும் இறை வார்த்தை இப்படி. 19/7 இல்

"வறியவனை அவன் சகோதரரே பகைக்கிறார்கள். அதுவுமன்றி, அவன் நண்பரும் அவனை விட்டுத் தூர அகன்று செல்வார்கள். அவன் ஆறுதலான வார்த்தையைத் தேடுவான். ஆனல் ஒன்றும் அகப்படாது." என்று கூறும் இறை வார்த்தையை ஒப்பிட்டு நோக்கும் நம் முன்னோர் என்ன உரைக்கின்றார் தெரியுமா?

"பாவியார் போன இடம் பள்ளமும், திட்டியும்"

பொருத்தம் எப்படி?

இன்னொன்றையும் கேளுங்களேன்!

இன்று நம் மத்தியிலே அரசியல் மனிதனை- பொருளாதார மனிதனை- விஞ்ஞான மனிதனைக் காண்கின்றோம். காரணம்:- அவன் இவ்வுலகில் ஏதோ ஒரு வழியிலே வாழ வேண்டும் என்று துடிக்கிறான் அனைத்திற்கும் மேலாக 'ஆன்மா' என்று ஒன்று உள்ளதே, இதைப் பற்றி சிந்திப்பவர்கள் மிகவும் குறைவு இப்படிப்பட்டவர்களை சுட்டிக்காட்டிய இயேசு உதிர்க்கின்ற பொன்மொழி-

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவிற்கு கேடு விளைவித்தால் அதனல் வரும் பயன் என்ன?

அதற்கு ஈடாக அவன் எதைக்கொடுப்பான்." என்று சவால் விடுகிறார். உண்மை தானே?

விட்டுக்கொடுக்காத திருநூல் ஆசிரியர் என்னே உரைத்துவிட்டார் இப்படி!

"அறிவாளி தன் ஆன்மாவை நேசிக்கிறான். விவேகத்தை காக்கிறவனும் நன்மையைக் கண்டடைவான்." என்று 19/8 இல் கூறுகின்ற வார்த்தைக்கு மேலும் ஒத்து ஊதுகின்றார் வள்ளுவப் பெருந்தகை!

"தன் நெஞ்சு அறிவது பொய்யற்க- பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச்சுடும்."

வள்ளுவனின் வாய்மொழி எப்படி?

### வாரம் ஒரு சிந்தனை

"முடியாத கதை ஒன்று உண்டு- அது உன் ஆன்மாவின் கதை."

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

ஒளி: 3
சுடர்: 39

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### திருக்குறளும் விவிலியமும் போட்டி: 4.

1) 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில் 'நீத்தார்' என்ற சொல் எத்தனை முறை வருகிறது?
2) பெரியவர், சிறியவர் என்பதை எப்படி அறியலாம்?
3) அருள்வழி நிற்பவர் யார்?
4) கடந்து போனவர் யார்?
5) இரு நிலைகள் எவை?
6) ஐம்புலன்களையும் அடக்கும் அங்குசம் எது?
7) அன்னை மரியைக் குறிக்கும் ஆதியாகம வார்த்தையைத் தருக.
8) 'பாவம்' என்றால் என்ன?
9) பொல்லாதவர் எவற்றை எண்ணி ஏமாந்தனர்?

நீத்தார் பெருமையில் விடைகள் உண்டு.

போட்டி முடிவு : 24-11-89.

போட்டி முடிவு 3இன் பரிசை அனுப்பத்தாமதமாகி விட்டதற்கு மன்னிக்கவும்.

பரிசுகளை நேரில் பெற வசதியுள்ளோர் தகுந்த ஆதாரத்துடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

அன்பு விழி.

### அங்கத்துவம்

246. ஞா. ஞானராஜ் 6, றோ. க. த. வி. புங்குடுதீவு.
247. சூ கி. பத்மஹீ 11. திருஇருதயக் கல்லூரி, வதிரி.
248. பெ. பத்மராஜன் 10. ம. வி. புங்குடுதீவு.
249. வ. அ. சேவியர் 11 றோ. க. த. க. வி விடத்தல்தீவு
250. யூ. எ. ஜெனிற்றல் 11. ,, ,, ,, ,, ,, ,,
251. B ஷகிலா 10. புனித சவேரியார் பெ. ம. ம வி. மன்னார்.
252. செ. தி. அருங்குமார் 9. புனித சவேரியார் ஆ. ம ம. வி. மன்னார்.
253. அ. ஜெனிற்று 9. அச்சுவேலி ம வி.
254. த. டொறின்யூலின் 10. புனித மரியாள் பெ. பா. ஊர்காவற்றுறை.
255. பெ. யூடிற் நிலாகனி 10. புனித மரியாள் பெ. பா. ஊர்காவற்றுறை.
256. சி, கமலினி 6. இலகடிப்பிட்டி றோ. க. த. பா.
257. தொ. மேரி யூட்ஸ் 8. ,, ,, ,, ,, ,,
258. பா. உதயசந்திகா 10. புனித மரியாள் பெ. பா. ஊர்காவற்றுறை.
259. அ. டி. ஷிரோமி 10. புனித மரியாள் பெ. பா. ஊர்காவற்றுறை.
260. பா. சுலக்சனு 9. புனித மரியாள் பெ. பா ஊர்காவற்றுறை.
261. G அருந்தவராணி 11. றோ. க. ம. வி. நாரந்தனை.
262. T. J. எட்வின்ருஜ் 10. அ. ம. தி. குருமடம் கொழும்புத்துறை.

### கௌரவ அங்கத்துவம்:

A 26 யே. அன்ரன் யோசவ் 13 புனித மாட்டினார் குருமடம் யாழ்ப்பாணம்.
A 27 தொ. மேரி கொலஸ்ரிக்கா 12 புனித சவேரியார் பெ. க. மன்னார்.
A 28 B பி. பேனடேற் 12 புனித சவேரியார் பெ க. மன்னார்.
A 29 M. பிரபாகரன் 12 நானாட்டான் ம. வி.
A 30 அ யூ விஜிற்று மேற்கு ஜேர்மனி
A 31 அ. மரிஸ்ரெலா 26/10 ஆசீர்வாதப்பர் வீதி, யாழ்ப்பாணம்.
A 32 அ. இ. லெம்பேட் புனித வளனார் அ. ம. தி. குருமடம் கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விண்ணக வாழ்வின் 2-ம் ஆண்டு நினைவு



பொன்ராசா கெனிஸ்ரஸ் கொலின்

அன்னையின் மடியில்: 19-06-1964

அநியாய அழிப்பு: 03-11-1987

உத்தமனே கொற்றவனே ஈவிரக்கமற்ற அரக்கர் உன்னுயிரை பறித்தனரோ. எப் செல்வமே எம் இதயம் சிதைந்ததடா. இறைவனடி நீர் சேர்ந்து இரண்டாண்டு சென்றாலும் எங்கள் மனம் உன் நினைவால் கதறி அழுகிறோம் என் செல்வமே! ஆண்டவனை இறைஞ்சுகிறோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 3-11-1989 வெள்ளிக்கிழமை புனித வளன் ஆலயத்தில் பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தந்தை தாய், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.

A/232

---

### 5-ம் வருட நினைவஞ்சலி



அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்
(முன்னாள் பாதுகாவலன் பத்திராதிபர்)

மலர்வு: 1892-09-15 மறைவு: 1984-11-5

அன்பு இறைவன் வான்வெளிதனில் வாழ்ந்திடுவோம். எளியவரை அன்பு செய்திட, ஏழை எளியவர்களில் இறைவனைக் கண்டிட மறையொழியில் சரணடைவோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-11-1989 காலை 6 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

A/252

---

### ஆண்டவன் அடி இணைந்த முதலாம் ஆண்டு நினைவு



அமரர் ச. அலெக்சிஸ் செபரத்தினம்
(அஞ்சலகக் கணக்குப்பரிசோதகர், அகில இலங்கை எழுதுவினைஞர் மன்றச் செயலாளர்)

விடிவு: 17-07-1928 அந்தமுடிவு: 7-11-1988

இறைவா! அறவழி காட்டும் அன்புத் தந்தையாகவும் அயலாரின் அன்புச் சகோதரனாகவும், துயருற்றோருக்கு துணையாளனாகவும், சமூகத் தொண்டனாகவும் வாழ்ந்து வந்த செபரத்தினம் எனும் அடியான் மூலமாக நீர் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றிகூறுகிறோம்.

உமது மகிமை விளங்க நீர் அளித்த கொடையை நீரே எடுத்துக் கொண்டீர், உமது இரக்கப் பெருக்கத்தால் அவர் உமது சந்நிதியில் வாழ்வாராக.

இவரின் ஆன்ம சாந்திக்காக பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் 7-11-89 செவ்வாய் காலை 10-30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவர் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள் சுற்றத்தவர்
சண்டிலிப்பாய வீதி
பண்டத்தரிப்பு A/24[illegible]

---

### 157-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி அந்தோனிப்பிள்ளை அருளம்மா

அன்னை மடியில்: 1921-05-16 இறைவன் அடியில்: 1989-06-01

உங்கள் அன்பு கணவனுக்கு
பண்புள்ள மனைவியாய்!
எங்கள் குழந்தைகளுக்கு
பாசமுள்ள தாயாய்!
பிறந்த வீட்டிற்கும்,
புகுந்தவீட்டிற்கும்
குலவிளக்காய்
பகைவரின்றிப் பலருடன்
பண்பாய் வாழ்ந்த
எங்கள் வீடு,
உங்கள் பிரிவால் இன்று
பாலைவனம்!
நீங்கள் போன இடம் என்றும்
சோலைவனம்!
நாமிருக்கும் வரை உங்கள்
புகழ் என்றும் வாழும்

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 1989-11-04-ந் திகதி சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

A/246

---

### அன்பின் நினைவு

S. M. J. Louis
(முன்னாள் பாதுகாவலன் ஆசிரியர்)

பிறப்பு: 20-8-03 மறைவு: 2-11-80

யேசுவே! அவரை உமது நித்திய அன்பிலும், அரவணைப்பிலும் வைத்திடும்.

மனைவி மக்கள், உறவினர்.
5. அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம். A/253.

---

### 40-ம் நாள் நினைவஞ்சலி



சைமன் அரியநாயகம்
(இளைப்பாறிய - தபால் தந்தி ஊழியர்)

பிறப்பு: 15-3-1909 இறப்பு: 29-9- 989

நிறைந்த வாழ்வை வாழ்ந்தீர்
பண்பு, பாசம், நேசம்,
நேர்மை யாவையும் வளமூட்டி
வளர்த்தீர்.
வாழும் நாம் உயர் இடம்
அடைகிறோம்.

இறந்த நீர் இறைவனிடம் நித்திய இளைப்பாற்றியில், சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்கள்.
35, இராசாவின் தோட்டம் வீதி
யாழ்ப்பாணம்

A/250

※※※※※※※※※※※※

பாவங்களினின்று மீட்கப் படும்படி இறந்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது புனிதமும் பயனுமுள்ள எண்ணமாய் இருக்கிறது. (2மக. 12:45)

---

### 6-ம் மாத நினைவஞ்சலி



R. W. சுமணபாலா (I. P.)

பிறப்பு: 16-10-1951 இறப்பு: 01-05-1989

மெய்வருத்தம் பாரார்
பசி நோக்கார்
கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும்
மேற் கொள்ளார்
செவ்வி அருமையும் பாரார்
அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்.

மனைவி, உறவினர்,
நண்பர்கள்,
சாவகச்சேரி. A/251

---

### அமரத்துவமெய்திய 10-ம் வருட நினைவஞ்சலி

மரியாம்பிள்ளை பிலிப்பையா
(தம்பு)
அச்சுநகர்

தோற்றம்: 4-3-1911 மறைவு: 11-11-1979

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே! மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

இரக்கமுள்ள யேசுவே! மரித்த விசுவாசிகளுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்,

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-11-89 வெள்ளிக்கிழமை காலை 5-45 மணிக்கு அச்சுநகர் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, (மரியம்மாவும்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.
A/2[illegible]9

---

### விண்ணுலக வாழ்வில் 31-ம் நாள் நினைவு அஞ்சலி



செ. அமரன ஜெயராசா
(டட்லி)

மலர்வு: 9-3-1954 உதிர்வு 4-10-89

"மாதம் ஒன்று மறைந்தது,
மண்ணில் நீர் மறைந்தின்று,
காலம் எது கடந்தாலும்,
கடவாது உம் நினைவு
எமமவர்கள் மனத்தினிலே!"

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக விண்ணுலக வாழ்வில் மாட்சிபெற, இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், பெற்றோர், மாமன், மாமி, உறவினர்
போயிட்டி, இளவாலை A/245

---

### முதலாண்டு நினைவஞ்சலி
6-11-89



திருமதி பிலோமினா இராயப்பு

மண்ணில் 7-8-1934 விண்ணில் 6-11-1988

உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (அரு. 11-25)

இவவன் ஆன்ம இளைப்பாற்றிக்காக சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் 6-11-89 திங்கட்கிழமை காலை 6, 00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமகள்
சில்லாலை தெற்கு
பண்டத்தரிப்பு A/242

---

### தியானத்தி,...
(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரைகளின் கருத்துக்களை மையமாக வைத்து நடைபெற்ற அர்த்தமுள்ள திருப்பலிப் பூசையில் அங்கத்தினர் பங்குபற்றி, புத்தூக்கம் பெற்றனர்.

ஆர். மனோரஞ்சிதன்
புனித வின்சன்ற் டீபவுல் சபை,
தாண்டவன்வெளி

---

### இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



யோசேப் திருச் செல்வம்
சூசைப்பிள்ளை சிங்கராஜா

தாயின் மடியில் 06-01-1917
இறைவனடியில் 03-11-1987

அன்பின் சொரூபமே, பாசத்தின் பிறப்பிடமே, கருணையின் பெருங்கடலே அயராது உழைத்து எம்மையெல்லாம் உயரவைத்த உத்தமனே! எங்களை எல்லோரையும் ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! இரண்டாண்டுகள் ஓடி மறைந்திடினும் உங்கள் இனிய நினைவு எங்கள் நெஞ்சில்நிலைத்திருக்கும் இவரின் ஆன்ம வாழ்விற்கு 6-11-89 ல் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சுண்டுக்குளி திரு முழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்
N. 14. இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் A/236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# வின்சென்ற டி போல் சபையின் அறப்பணி

பெங்களூர் கிறிஸ்து அரசர் ஆலய வின்சென்ற் டி போல் சபை ஏழைக்குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அளித்து வருகிறது. அது தொடங்கிய காலத்திலிருந்து 20 வளர்ந்தோரும் 32 பிள்ளைகளும் அடங்கிய 10 குடும்பங்களை சுவீகரித்து அவற்றுக்கு வாராந்த உதவி, பிள்ளைகளுக்கு கல்வி, வைத்திய உதவி ஆகியவற்றைக் செய்து வருகிறது. செப்டம்பர் 24-ம் திகதி அது வெளியிட்ட வெள்ளிவிழா அறிக்கையில் மூன்று குடும்பங்கள் விசேடமாகக் குறிப்பிடப்பட்டன. எலும்பில் காச நோயினால் வருந்திய மேரி புஷ்பாவுக்கு வைத்திய உதவியும், அவளது மூன்று பிள்ளைகளுக்கு கல்வியும் அளிக்கப்பட்டு, அவள் குணமடைந்ததுடன் அவளது மூன்று பிள்ளைகளுக்கும் வேலை வாய்ப்புக்கிடைத்தது.

திரு. ஜோசவ் குடும்பத்தினர்க்கு வங்கிக்கடன் பெறவும், அதைக் கொண்டு ஊறுகாய் உற்பத்தி செய்துவிற்கவும் உதவி செய்யப்பட்டது.

தனபால் பத்மா என்னும் விதவை தொழு நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததால் அவளுக்கு வைத்திய உதவியும், பிள்ளைகளுக்கு கல்விவாய்ப்பும் அளிக்கப்பட்டது. அவள் பூரண குணமடைந்தாள். கத்தோலிக்க மதத்தில் சேர விரும்பியபடியால் அவர்களுக்குத் திருமுழுக்கு அளிக்கப்பட்டது.

1964-ல் எட்டு அங்கத்தவருடன் ஆரம்பித்த இப்பந்தியில் தற்போது 17 அங்கத்தவர் உள்ளனர்.

## எந்த செய்தியையும் வெளியிடலாம்

திருத்தந்தையின் இந்தோனேசியப் பயணத்தின் போது வெளிநாட்டு நிருபர்கள் கிழக்கு திமோர்பற்றிய எந்தச் செய்தியையும் வெளியிடலாம் என இந்தோனேசிய தளபதி சுட்றிஸ்னோ கூறியுள்ளார். தகவல் அமைச்சு பத்திரிகையாளருக்கு நடத்திய கூட்டத்தின் போதும் அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை.

திருத்தந்தையின் வருகையின்போது வழியெங்கிலும் பல்லாயிரக் கணக்கான பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படுவதோடு, கடற்படை, ஹெலிகொப்டர்களின் பாதுகாப்பும் அளிக்கப்படுமென சுட்றிஸ்னோ கூறினார்.

# துரித மீட்டற் பயிற்சிப் பாசறை

மரியாளின் மாதமென்று மலர்ந்த ஐப்பசித் திங்களிலே இயேசுவின் நற்செய்தியை, மறைபரப்புப்பணியை தம்மால் இயன்றளவு பரப்பி வரும் எம் மறை ஆசிரியர்களுக்கென ஒரு கருத்தரங்கு கடந்த 13.10.89 – 15.10.89 வரை ருகம- தேவத்தை ஞானொடுக்க இல்லத்தில் தமிழ்ப்பகுதி பொறுப்பு இயக்குநரான அருட்சகோதரி பெனடிக்ரா அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பமானது.

12 ஆம் திகதி மாலை சுமார் 7-00 மணியளவில் மறையாசிரியர் ஒன்று கூடியதும், மறையாசிரியரின் பொதுச்செயலாளர் திருவாளர் அம்புறோஸ் பீற்றர் அவர்கள் அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்றார். அவரின் வரவேற்புரையைத் தொடர்ந்து பண்பாட்டு முறைப்படி விளக்கேற்றி சிறு செபவழிபாடு இடம்பெற்றது.

செபவழிபாட்டின் பின் தமிழ்ப்பகுதி பொறுப்பு இயக்குநரான அருட்சகோதரி பெனடிக்ரா அனைவரையும் வரவேற்று, கருத்தரங்கின் நிகழ்ச்சி நிரல் பற்றி விளக்கினார். அடுத்து வந்த இருநாட்களிலும், வேதாகமம், திருவழிபாடு, திருவருட்சாதனங்கள், படிப்பித்தல்முறைகள், இன்றைய உலகில் திருச்சபை, திருச்சபையின் பொருளாதாரம், அந்நிய மறைகளுக்கிடையிலான தொடர்பு, போன்ற தலைப்புகளின் கீழ் விளக்கவுரைகளும், மீட்டற்பயிற்சிகளும் தகைமை பெற்ற விரிவுரையாளர்களான திரு. திருமதி மரியரட்ணம், திரு பீற்றர், அருட்சகோதரிகளான பெனடிக்ரா, அனெல்லா, ராணி ஆகியோரால் நடத்தப்பட்டன.

குழு முயற்சிகளும், மீளாய்வுகளும், சிறப்பாக இடம் பெற்றன. அருள்தந்தையர்களான A. றெஜினோல்ட், J. J. இம்மானுவேல், V. A. ஜேசுதாசன் ஆகியோரால் மூன்று நாட்களிலும் மிகவும் கருத்தாழமுள்ள உரைகளோடு கூடிய திருப்பலிப்பூசைகள் தமிழில் இடம்பெற்றன. இது தமிழ்ப்பூசையே காணாத பங்குகளில் இருந்து வந்த எத்தனையோ தமிழ் மறையாசிரியர்களுக்கு ஒரு பெரும் அருட்கொடையாக இருந்தது என்பது தெளிவு. விசேட கலை நிகழ்ச்சிகளும் மறையாசிரியர்களால் சிறப்பாக நடத்தப்பட்டன.

கொழும்பு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநரான அருள்திரு. சிறில் பெரேரா அடிகளாரால் ஆதியாகமத்தை அடிப்படையாகக் கொண்ட படைப்பின் வரலாற்று (கிரியேஷன்) சம்பவத்தின் ஒலி-ஒளி திடைப்படமாக (வீடியோ) காட்டப்பட்டது. இது மறையாசிரியருக்கு ஒரு வேதாகம மீட்டற்பயிற்சியாக இருந்தது.

இக்கருத்தரங்கில் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த 8 தமிழ்ப்பேசும் மறைமாவட்டங்களிலிருந்தும், 27 பங்குகளைச் சேர்ந்த 136 மறையாசிரியர்கள் முதன் முறையாக இவ்வாறு கலந்துகொண்டு பயனடைந்தமை மிகவும் சந்தோஷப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சியாகும்.

இறுதிநாளான ஞாயிற்றுக் கிழமையன்று காலை கொழும்பு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநரான அருள்திரு. சிறில்பெரேரா அடிகளார் மறையாசிரியருக்கு விடுத்த தமதுரையில் பற்பல அசௌகரியங்களின் மத்தியிலும், ஆர்வத்தோடும், மகிழ்வோடும், பொறுமையோடும், இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பயன் பெற்றதையிட்டு தனது சந்தோஷத்தையும், நன்றியையும் தெரிவிப்பதோடு, தமிழ் மறையாசிரியரின் முன்னேற்றத்திற்காகத் தனது சேவையை வழங்கத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

அதன் பின்பு வேதாகமப் போட்டியொன்று இடம் பெற்று அதில் வெற்றியீட்டியவர்களுக்கு சிறு பரிசுகள் வழங்கப்பட்டன. மதிய உணவின் பின் நடந்த கலந்துரையாடலில் மறையாசிரியர்கள் தமது குறைபாடுகளையும், தேவைகளையும் தெரிவித்தனர்.

பின்பு பொதுச்செயலாளரினாலும், இயக்குநராலும், நன்றிகளும், நல்லாசிகளும் வழங்கப்பட்டதுடன் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

தகவல்:- சுகந்தி பெரியசாமி,
ஜோசேப்வாஸ் நடுநிலையம்
கொழும்பு- 8

## நன்றி! நன்றி!!

இவ்வாரம் 8600 பாதுகாவலன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. ஊக்குவிப்புக்களை மேற்கொண்டு வரும் மறைப்பணியாளர்கள், பக்திச்சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளும், பாராட்டுக்களும், (ஆ-ர்)

மடுத்திருப்பதியில்
## வழிபாட்டு ஒழுங்கு முறை

| | | |
|---|---|---|
| காலை | 6-15 மணி: | தினசரித் திருப்பலி. |
| ,, | 6-30 ,, | ஞாயிறு திருப்பலி. |
| மாலை | 6-30 ,, | தினசரிச் செபமாலை. |
| ,, | 7-00 ,, | (சனிக்கிழமையில் மட்டும்) நற்கருணை ஆசீர்வாதம். |

பரிபாலகர்,
மடுத்திருப்பதி.

A/248.

# பெண்கள் நற்செய்தி அடிப்படையில் வாழவேண்டும்

சங்கனுச்சேரி மறைமாவட்டத்தைச் சேர்ந்த ''மாத்ரு ஜோதி'' என்னும் மாதர் சங்கத்தின் 9 ஆவது ஆண்டு விழாவில் திருவனந்தபுரம் துணை ஆயர் லோரன்ஸ்மார் அப்பிரேம் பெண்கள் நற்செய்தி அடிப்படையில் வாழ்ந்து சமுதாயத்தில் தமக்குள்ள உயர்ந்த இடத்தைப் பேணிக்கொள்ள வேண்டும் என்று கூறினர்.

விசுவாச அறிக்கைப் பேரணியில் வெள்ளை உடை தரித்த 3000 தாய்மார் பேராலயத்திலிருந்து கவுக்காட்டு மண்டபத்துக்குப் பவனிசென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பிதா லூயிஸ் வெள்ளாணிக்கல், அருட்செல்வி அலிஸ் நாரக்கத்தாரா, திருமதி சிரியாக் கார்த்திகைப் பள்ளி ஆகியோர் பவனிக்கு தலைமை தாங்கிச் சென்றனர்.

பவனிக்குப் பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் அருட்செல்வி ஜேர்மேன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

கலாச்சார நிகழ்ச்சிகளிற் பரிசு பெற்றோருக்கு பேராயர் மார் ஜோசவ் பொவதில் பரிசுகளை வழங்கினர்.

## இளைஞர்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், இந்த வளர்ச்சியை இங்கு காணும் போதுதான் உண்மையிலேயே பெருமிதம் அடைவதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும், பெற்றோருக்கான சுவையான நிகழ்ச்சியும், கலந்துரையாடலும்நடத்தப்பட்டது. இக்கவந்துரையாடலில் பெற்றோர் இவ்வியக்கம் தொடர்ந்து என்னென்ன ஆக்கப்பணியில் ஈடுபடவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தனர். (இ.உ.இ.) அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட கலைநிகழ்ச்சிகள் அனைவரினதும் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில்பேராலய உதவிப் பங்குத் தந்தை அருட்திரு: அன்ரனிபாலா அவர்களும் ஏனைய பங்கு இளைஞர்களும் கலந்துகொண்டனர்.

இளைஞர் உருவாக்கல் இயக்கம்
(Y.F.G.)
யாழ். மரியன்னை பேராலயம்.

# யாழ் கொமிற்சியம்

சகோ. பிராங்டவ் நூற்றுண்டு விழா போட்டி முடிவுகள்.

பேச்சுப்போட்டி இளைஞர்

1. செல்வி அ. மேரி தர்மினி கிளிநொச்சிக் கியூறியா.
2. செல்வி வெ. ஆன் லூமினு இளவாலை இளைஞர் கியூறியா.
3. செல்வி அனிற்று றுக்ஷினி யாழ் இளைஞர் கியூறியா.

பேச்சுப்போட்டி வளர்ந்தோர்.

1. செல்வி கென்றிலீலி மலர் கிளிநொச்சி கியூறியா.
2. செல்வி அருள் நாயகி யாழ். வளர்ந்தோர் கியூறியா
3. செல்வி யூ. வரத மனோகரி யாழ். வளர்ந்தோர் கியூறியா.

வினாவிடை:- இளைஞர்.

1. இளவாலை இளைஞர், கியூறியா.

வினாவிடை:- வளர்ந்தோர்.

1. இளவாலை வளர்ந்தோர் கியூறியா.

எழுதிச் செபிப்போம்.

1. செல்வி ஜெயந்த குமாரி பிறின்ஸ், சில்லாலை.
2. திரு. V. போல், "சுந்தர பவனம்," மாகியம் பதி, சண்டிலிப்பாய்.
3. செல்வி ச. லூர்துநாயகி, சக்தியுடைவளாயிருக்கிற கன்னிகை பிரசீடியம், புனித யாகப்பர் ஆலயம், யாழ்ப்பாணம்.

கட்டுரைப் போட்டி.

1. செல்வி லூசியா கிறேஸ் அருட்பிரகாசம். 2-ம் வட்டாரம், புங்குடுதீவு.
2. செல்வி ஆ. மரிய இமக்குலெற் சுசீலா, கீரியந்தோட்டம், சில்லாலை, பண்டத்தரிப்பு.
3. செல்வி றூபினு ஜொய்ஸ் மைக்கல் 2-ம் வட்டாரம், புங்குடுதீவு.

மேற்படி பரிசளிப்பு 4-11-89 ல் நடைபெறும் விழாவில் இடம் பெறும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
இல: QD/ 100/ 58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org